ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

भगवद्गीता किञ्चिदधीता गङ्गाजललवकणिका पीता ।
सकृदपि येन मुरारिसमर्चा क्रियते तस्य यमेन न चर्चा ।

श्री भगवद्गीता - ஸ்ரீ கிருஷ்ணனால் கூறப்பட்ட கீதா சாஸ்திரமானது

किञ्चित् - அற்பமாக

अधीता - அறியப்பட்டிருக்கிறது

गङ्गाजल लव कणिका - புண்ய நதியான கங்கா ஜலத்தினுடைய திவலையானது

पीता - அருந்தப்பட்டது. இவ்விதமிருப்பினும்

सकृदपि - ஒரு முறையாவது

येन - எந்தப் புருஷனால்

मुरारिसमर्चा - ஸ்ரீமந்நாராயணருடைய பூஜையானது

क्रियते - செய்யப்படுகின்றதோ

तस्य - அந்தப்புருஷனுக்கு

यमेन - இயமனோடு

चर्चा - விசாரமானது

नास्ति - இல்லை.

இதர ஸாதனங்கள் ஒன்றையும் அதிகம் அனுஷ்டிக்காவிட்டாலும் ஸ்ரீ பகவதாராதனம் ஒரு தடவையாவது செய்கிறவர்களுக்கு இயமனுடன் வாதம் ஏற்படாதென்று அறிவிக்கிறார்.

ஒருவன் சாஸ்திரங்களையும் பூராவாக அறிந்துகொள்ளாமல் கீதாசாஸ்திரத்தில் மாத்திரம் கொஞ்சம் அத்தியயனம் செய்திருக்கிறான். கங்காநதியினுடைய தீர்த்தத்தில் ஒரு திவலை பானம் செய்திருக்கிறான். இதைத்தவிர வேறுகர்ம்மானுஷ்டானம் ஜபம் முதலிய ஸத்கர்ம்மாக்கள் ஒன்றும் அனுஷ்டிக்கவேயில்லை. அவ்விதமிருந்தும் முரன் என்கிற அரக்கனைப்போரில் வென்றவரான ஸ்ரீ வைகுண்டநாதரான பகவானை எப்பொழுதாகிலும் ஒருதடவை பக்தியுடன் பூஜிப்பானாகில் அவன் ஜன்மாவையடைந்த பிராணிகளுக்கு அவரவர்களுககுற்ற பாபபுண்யங்களுக்குத் தகுதியான பலத்தை யளிப்பவனும் அவசியம் தர்சிக்கவேண்டிய மிகவும் பயங்கரமான இயமனுடன் ஸம்பாஷணமே செய்யமாட்டான். பின்னே பகவானோடு வைகுண்டத்தில் ஆனந்தமாய்வஸித்துக்கொண்டிருப்பான். ஆகையால் மிகவும்குரூரனான அந்தகனுடைய முகத்தைப் பார்க்காமலிருக்கவேண்டி அவரவர்களும் தம்மாலியன்றவரையில் பகவதாராதனம் செய்யவேண்டியது முக்கியம். சுபம்!

உபபத்திராதிபர்,

## சிரத்தானந்தர்கூறிய விதவாவிவாகத்திற்கு கண்டனம்

(497-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

கலியுகத்தில் பாராசர ஸ்மிருதியின்படிதான் கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டுமென்றும் அவரால் 'மிருதே பர்தரி' என்கிற வசனத்தால் ஸ்திரிகளுக்குமறுமணத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் இவர் சொல்வதும் சரியல்ல, விவாஹமென்பது, ஸ்திரீகளை அவர்களுக்கு முக்கிய பாத்தியஸ்தர்களால் சாஸ்திரங்களில் கூறிய விதிப்படி முக்கிய காலங்களில், சாஸ்திரத்திற்கூறிய இலக்கணங்களோடு கூடிய வரனையும் பொருட்டுத்தானம் கொடுப்பதேயாகும். இந்ததானம் இருவகையாகும். ஒன்று வாக்தானம் மற்றொன்று மந்திரங்களால் செய்து கொடுக்கும் தானம். இவ்விரண்டில் முதலாவதாகக் கூறப்பட்ட வாக்தானம் என்பது வரனுக்கு வேண்டிய பிதா முதலியவர்களிடம் பெண்ணினுடைய முக்கிய பாத்தியஸ்தர்களான பிதாமுதலியவர்கள் என்னுடைய கன்னிகையை தங்களுடைய புத்திரனுக்கு சாஸ்திர விதிப்படி இந்தத் தேதியில் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்திருப்பதால் தாங்கள் புத்திரனுடன் ஷை தேதியில் வந்து கல்யாணத்தை முடித்துக்கொள்ளவேணுமென்று அதற்கு வேண்டிய லௌகிக காரியங்களையும் செய்துகொடுத்து இருவர்களும் அவ்விதமே சரியென்று திருப்தியாய்ப் பேசிமுடித்துக் கொள்வதேயாகும். பிறகு குறிப்பிட்ட சுபதினத்தில் இவர்கள் இருவரும் மற்றுமுள்ள பந்துக்களும்கூடி சாஸ்திர விதிப்படி மந்திரங்களை ஜபித்து உதகதாராபுரஸ்ஸரமாய் கன்னிகையை தானம் செய்து கொடுத்து சப்தபதி முதலான மற்றுமுள்ள கார்

யங்களையும் செய்வது இரண்டாவது தானமாகும். இவ்விரண்டில் முதலாவதான வாக்தானம் ஏற்பட்ட பிறகு இரண்டாவதான மந்திர தானம் செய்வதற்குள் அந்தவரனுக்கு தெய்வீகமாக ஏதாகிலும் அசௌகர்யம் நேர்ந்துவிட்டால் அவனுக்குக்கொடுப்பதாக தீர்மானம் செய்யப்பட்ட கன்னிகையை மறுபடியும் வேறு ஒருவனுக்கு விவாஹம் செய்து கொடுக்கிறதா? அல்லது, பூர்வம் நிச்சயிக்கப்பட்ட அவள் பதியின் காலம் சென்று விட்டபடியால் அவளுக்கு மறுமணம் கூடாதென்று அவளை விதவையாகநிறுத்தி விடுகிறதா என்று சங்கை நிகழலாம். இங்கு வாக்காலும் உதக தானத்தாலும் ஒரு கன்னிகைக்கு விவாஹ நிச்சயம் ஆயிருந்தாலும் சப்தபதி என்கிற வைதீக ஸம்ஸ்காரம் ஏற்படாத பக்ஷத்தில் மத்தியில் பதியின் வியோகம் ஏற்பட்டாலும் அந்தக் கன்னிகையை மற்றொருவனுக்கு விவாஹம் செய்து கொடுக்கலாம். முன் செய்தவாக்நிச்சயம் உதகதானம் முதலியவைகளால் அவள் விவாஹிதை ஆகமாட்டாள். இந்த அபிப்ராயத்தையே

नोदकेन न वा वाचा कन्यायाः पतिरुच्यते ।
पाणिग्रहणसंस्कारात् पतित्वं सप्तमे पदे ॥ यमः ।

ஒருவனையுத்தேசித்து கன்னிகையைக்கொடுப்பதாக உதககானம் செய்தாலும் அல்லது வாக்தானம் செய்தாலும், அந்தவரன் பதியாக ஆய்விடமாட்டான். பின்னே விவாகத்திற்குரிய வைதிக ஸம்ஸ்காரங்களைச் செய்து ஸப்தபதி என்கிற கிரியை பூர்த்தியான பிறகுதான் அவன் பதியாக ஆகிறான் என்று வர்ணாசிரமகாண்டத்தில் யமன் கூறுகிறார்.

மனுவும், ஸப்தபதி என்கிற ஸம்ஸ்காரமான பிறகுதான் பதிஸித்தியும் பார்யாஸித்தியும் ஏற்படுகின்றது.

पाणिग्रहणिका मन्त्रा नियतं दारलक्षणम् ।
तेषां निष्ठातु विद्वद्भिस्सप्तमे पदे ॥

என்று இதினால் சொல்லியிருக்கிறார்.

இவ்விதமே வாக்தானம் செய்தபிறகு பதிமரித்துவிட்டால் ஸப்தபதிஎன்கிற கர்மாபூர்த்தியாகாதபடியால் அவனுக்குபதித்வஸித்தியேற்படவில்லை. ஆகையால் அவளை மற்றொருவருக்குத் தானம் செய்துகொடுக்கலாம்.

अद्भिर्वाचा च दत्तायां म्रियेतादौ वरो यदि ।
न च मन्त्रोपनीतास्यात् कुमारी पितुरेवसा ॥ स्मृत्यन्तरे ।

ஒரு ஸ்திரீக்கு உதகதானமும் வாக்தானமும் ஆனபிறகு ஸப்திபதி முதலான விவாஹ கர்ம்மா ஆகிறதற்குமுன் வரன் காலமாய் விட்டால் மந்திரங்களால் அவளுக்குப் பதியாகச் செய்யப்படாதபடியால் அவள் முன்போல் பிதாவின் கன்னிகைதான். அவளைப்பிதா பின்னொரு வரனுக்கு விவாகம் செய்து கொடுக்கலாம். என்று வைத்தியநாத தீக்ஷிதீயத்தில் வஸிஷ்டர் கூறுகின்றார்.

अन्यान्यस्मै प्रदातव्या वाग्दानेतु कृते वरे ।
मृतेऽन्यस्मै प्रदातव्या मृते सप्तपदात् पुरा ॥ व्यासः ।

கன்யகையானவள் வேறொருவனையும் பொருட்டுக் கொடுக்கத் தகுந்தவள் எப்பொழுதென்றால் வாக்தானம் செய்தபிறகு ஸப்தபதி முதலான வைதிக மந்திரங்களால் செய்யப்படும் ஸம்ஸ்காரங்களாகாமலிந்திருந்தால் மத்தியில் பதியின் மரணம் ஏற்பட்டால் அப்பொழுது செய்யலாம். ஸப்தபதி முதலான கார்யங்கள் பூர்த்தியாய் விட்டால் கூடாது. என்று வியாஸர் கருதுகிறார்.

இவ்விதமே இன்றும் பல மஹரிஷிகள் அபிப்பிராயப்படுகின்றார்கள். இதுவரையில் வெளியிடப்பட்ட பிரமாண வசனங்கள் கன்னிகாதானமென்பது வாக்தானமென்றும் ஸப்தப்தி முதலானவைகளால் செய்யப்படுகிற மந்திரதானமென்றும் இருவகையாகும். முந்திக்கூறிய வாக்தானமென்பது கௌணமான தானமாகும். இரண்டாவதான வைதிகமந்திரங்களால் செய்யப்படும் தானம் முக்கியதானமாகும். இவ்விரண்டிற்குள் முந்தி கௌணதானம் ஏற்பட்டுப் பிறகுதான் முக்கியதான ஏற்படவேண்டும். முந்திய தான கௌணதானம் ஏற்பட்டு முக்கியமான மந்திரதானம் ஏற்படுகிறதற்குள் வரனுக்கு அபாயம் நேர்ந்தால் அந்தக்கன்னிகை மறுபடியும் விவாகம் செய்து கொடுக்கக் கூடியவள் தான்.

(தொடரும்.)

உபபத்திராதிபர்.

---

# ஆராய்ந்து செயல்.

ஆண்டவன் உலகத்தையும், எண்ணிறந்த பலதிறப்பட்ட ஜீவகோடிகளையும் படைத்தான். அவற்றுள் மக்கள் என்ற ஒரு வகுப்பினையும் படைத்துள்ளான். அந்த மக்கட்பிறப்பே பிறவற்றிற்கெல்லாம் மேலானது. பிற பிறப்புக்கள் மக்களாவார் செய்யும் வினைகட்குத்துணை நிற்கவே தோன்றின. அவற்றால் தமது புத்தி சக்தியைக்கொண்டு ஏதும் தொழில்புரிய இயலாது. ஆறறிவினையும், எதனையும் செய்துமுடிக்கும் ஆற்றலினையும் உடைய மக்கள் வகுப்பினரே உலக உபகாரமான செயல்களைச் செய்யத் தகுந்தவராவர்.

எல்லாச் செயவினையும் ஒருவரே செய்துவிடலாம் என்பதும் முடியாதது. எல்லாரும் ஒரேசெயலைத்தான் செய்யவேண்டும் என்பதும் பொருந்தாதது. ஒருவராகச் செய்யக்கூடிய செயல்களும் உண்டு. பலர் சேர்ந்தே செய்யக்கூடிய செயல்களும் உண்டு. ஒருவர் செய்து நிறைவேற்றக்கூடியதற்குப் பலர் செய்ய முன்வருவது பயனற்ற காலப்போக்காகும். பலர் சேர்ந்தே செய்யக்கூடியதை ஒருவர் தாமே செய்து நிறைவேற்றுவதாக முயலுவது இயலாததொன்றாகும்.

எந்தச் செயலைச் செய்யத் தொடங்கினாலும் அதனைச் செய்யுமுன் ஒவ்வொருவரும் "இதுதம்மால் இடையூறின்றிநிறைவேற்றக்கூடியதா? இடையூறு நேரிடுமாயின் அதனை நீக்கிக்கொள்ளத் தமக்கு வன்மை உண்டா? அங்ஙனம் இடையூற்றையும் போக்கி நிறைவேற்றினால் அதனால் வரும்பயன் பெரிதா? அவ்வாறு பெறப்படும் பயன் தமக்கு நேர்ந்த கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஈடுகொடுக்கக்கூடியதாகுமா?" என்றெல்லாம் முற்கூட்டி ஆராய்ந்தேசெய்தல் வேண்டும். அங்ஙனம் செய்பவரே கருதிய கருமத்தை இனிது நிறைவேற்ற வல்லவராவர்.

இங்ஙனம் ஆராய்ந்து கொண்டவர் அதனை இனிது நிறைவேற்றும் பொருட்டுத் தக்கதுணைவரைத் தேடிக்கொள்ளல் பொருத்தமானது. அப்படித் தேடிக்கொள்வது தக்கதொரு பின்பலமாகும். துணைவரைத் தேடிக்கொள்வது மாத்திரம் போதாது,

தாம் செய்யக் கருதியிருக்கும் செயலைப்பற்றி அவரது கருத்தையும் நன்கு அறிந்துகொள்ளல்வேண்டும். அத்துணைவர் தமது செல்வம் முதலியவற்றின் பெருக்கத்தைக்கருதி முதலை அழிக்கும் செயலினராக இருத்தல் கூடாது. அவர் பயன் தரும் என்று உறுதியாக நம்பப்படாத செயல்களைச் செய்பவராகவும், செய்யுமாறு தூண்டுபவராகவும் இருத்தல் கூடாது. ஆனால் அவர்தாம் தொடுத்த காரியம் இனிது நிறைவேறாமையால் உண்டாகும் பழிசொற்கு அஞ்சுபவராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு உற்றதுணைவருடன் ஆராய்ந்த பிறகும் அவர் 'தன் கையே தனக்குதவி' ஆகையினாலே மீட்டும் ஒருமுறை "தாம்இச் செயலைச் செய்யவேண்டியதுதானா? செய்யாவிட்டால் வரும் இழுக்குயாது? அந்த இழுக்கைப் போக்கிக்கொள்ள வேறு வழி உளதா? உளதாயின் அந்த வழியிலே போக்கிக்கொள்ள முயலுவது இலகுவா ? இந்தச் செயலைச் செய்வது இலகுவா ? இந்தச் செயலைச் செய்தேதான் போக்கிக்கொள்ள வேண்டுமாயின் இதுதான் அதனை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க காலமா? பிறிதொரு காலத்திலே செய்வது நன்மையைத் தருவதா ?" என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். தகுந்த காலத்தை அறிந்து செய்தால் உலகத்தைப்பெற விரும்பினாலும் பெற்றுவிடலாம். அப்படியே தகுந்த இடத்திலிருந்தும் தமது காரியத்தைத் தொடங்கல் வேண்டும். எவ்வளவு நன்றானாலும் தமக்கு மாத்திரம் பெரும் பயனை அளித்து பிறர் பலர்க்கும் தீமையை விளைவிப்பதாயின் அச் செயலைச்செய்தல் கூடாது. அறிவினை உடையவர் தம்மிலும் உலகினர்க்கு நன்மையைச் செய்யும் காரியங்களையே செய்ய முயலுவர்; செய்வர்.

இங்ஙனம் ஆராயாது ஊக்கமிகுதியால் நிறைவேற்றி விடலாம் என்று தொடங்கியவர் தமது நிலைமையை உணராத வெறியராவர். அவர் விரைந்து அழிந்துவிடுவர். மயில் தோகையாகிய பாரமானாலும், பஞ்சுப்பாரமானாலும் அச்சுத்தாங்கும் அளவுக்கு மேலாகச் சுமத்தப்படின் அந்த அச்சு முறிந்து விடுமல்லவா ? நுனிக்கிளையிலிருந்து அடிமாத்தை வெட்டுவது வெட்டுபவனது அழிவுக்கு ஆதாரமல்லவா ? நல்லவழியில் முயலாத செயல்களனைத்தையும் இங்ஙனமேதான் சித்திபெறாமல் அழிவன. அவற்றை

நிறைவேற்றப் பலர் முயன்றாலும் அம்முயற்சி வீணேயாகும். அவை நல்லனவாக இருப்பினும் பயன் தாராதொழியும். நன்றாக நிறைவேற்றும் வலிமையினை உடையவர் போலத்தோன்றி இடையிலே வலியருந்தவர் பலர். பொருந்தாச் செயல்களைச் செய்பவர் உற்ற நட்பினராலும் பழிக்கப்படுவர். எடுத்த காரியம் இனிது நிறைவேறாது. இடையிலே முறிதல் இழுக்கினையே தரும்.

ஆதலின், ஒவ்வொருவரும் செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் ஆகிய ஆறையும் அறிந்துகொள்ளவேண்டும். வினைவலி தன்வலி மாற்றான்வலி துணைவலி என்ற நான்கையும் ஆராய்ந்து கொள்ளல் வேண்டும். முடிவு இடையூறு முற்றினால் வரும்பயன் இவற்றைப் பார்த்துக்கொள்ளல்வேண்டும். இங்ஙனம் ஆராய்ந்து நல்ல துணைவருடன் நல்ல காலத்தில் நல்ல இடத்தில் நல்ல செயல்களைச் செய்தல் புகழ்பெறும் வழியாகும். இவ்வாறு செய்பவரே தலைப்பிலே கூறியபடி லோகோபகாரமான செயல்களைச் செய்தற்குரிய பெரியார் ஆவர்.

பாண்டவர் துரியோதனனதியரால் ஒட்டப்பட்டுக் காட்டிலே இருந்து வருகின்றனர். அப்பொழுதும் துரியோதனனுக்குப் பாண்டவரிடத்திலுள்ள பகைமைக்குணம் மாறவில்லை. எப்படியாவது அவர்களைக்கொன்று விடவேண்டும் என எண்ணங்கொண்டான்: காளமாமுனிவர் என்ற ஒருவரைச்கொண்டு ஒரு யாகத்தைச் செய்வித்தான். அந்த யாகத்திலே ஓர் அரக்கன் தோன்றினன்; முனிவரைப் பார்த்து "என்னை அழைத்தது எதன் பொருட்டு விரைவிலே சொல்வீராக?" என்றனன்.

என்றலும் முனிவர் துரியோதனனது துர்ப்போதனையால் அரக்கனை நோக்கி "நீ சென்று இப்பொழுதே காட்டிலே வாசம் பண்ணிவருகின்ற பாண்டவர்களைக் கொன்று வரல்வேண்டும், இதன் பொருட்டே உன்னை அழைத்தது" என்றுகூறினர். கூறக் கேட்ட அரக்கன், "முனிவரே, அந்தப் பாண்டவர்கள் உயிருடன் இராராயின் திரும்பிவந்து உம்மையே கொன்றுநின்பேன்" என்று கூறினன். முனிவரும் உடன் பட்டனர். அரக்கனும் போயினன்.

இங்கே இவ்வாறாக, அங்கே காட்டிலே இருக்கும் பாண்டவர் முன்னே ஓர் அந்தணச் சிறுவன் வந்தான்; தருமரைநோக்கி

"ஐயரே, யான் அரிதின் முயன்றுபெற்ற மான்தோல் ஒன்றை ஒரு கலைமான் பற்றிக்கொண்டது. தயைசெய்து அதனைப்பறித்து எனக்குக் கொடுங்கள்" என்று கூறித்தனது தோலைக் கவ்விக் கொண்டு ஓடும் கலைமானையும் காட்டினன். காட்டலும், பிறாது துன்பத்தினைக் காணப்பொறாத தருமர் அந்த மானைப்பின்தொடர்ந்தனர்; நிழல்போலத் தமயனைப்பின்பற்றி நடக்கும் தம்பிமார் நால்வரும் உடன் சென்றனர். அந்த மாயமான் பிடிபடுவதுபோல காட்டிக்கொண்டு வெகுதூரம் அவர்களைக் கொண்டுசென்று மறைந்தது. பாண்டவர்களும் களைப்புற்று ஒருமரத்தின் நிழலிலேதங்கினர். தருமருக்கு நாவரட்சி உண்டாயது. நீர் வேட்கை மிக்கது. தாகம் தவிரத் தண்ணீர் கொணருமாறு சகாதேவனை ஏவினர்.

ஏவலும், அவன் வெகுதூரம் சென்றான்; ஒரு பொய்கையைக்கண்டான்; அதன் குணத்தை ஆராயாது நீரைப்பருக எண்ணினான். அக்காலத்தில், சகாதேவனை நோக்கி "சகாதேவ, என்னுடைய வினாக்களுக்கு விடை உதவாமல் நீ இந்தத்தண்ணீரைப் பருகலாகாது', என்று ஓர் ஆகாயவாணி கூறிற்று. தாகவிடாய் மிக்குளதாதலின் அதனைப் பொருட்படுத்தாது பருகினான். பருகலும் அது நச்சுப்பொய்கையாதலின் அதன் நீரிலிருந்த விஷம் தலைக்கேற இறந்து விழுந்தான். தண்ணீர் கொண்டுவரச்சென்ற தம்பி வாராமையைக்கண்ட தருமர் நகுலனை ஏவினர். அவனும் அங்ஙனமே ஆனான். அர்ச்சுனனை ஏவினர். அவனும் அவ்வாறே முடிந்தான். பீமனை ஏவினர் அவனும் அப்படியேதன்னைச்செய்து கொண்டான். நால்வரும் வாராமையைக்கண்ட தருமர் தாமே சென்றார். பொய்கைக்கரையிலே தம்பிமார் பிணமாய்க் கிடப்பதைக்கண்டார், மூர்ச்சையுற்றார்; இறந்தவர்போல வீழ்ந்தார்.

இந்நிலையில், காளமாமுனிவரால் ஏவப்பட்ட அரக்கன் அந்தப்பொய்கைக்கரைக்கு வந்தான்; ஐவரையும் புரட்டிப்பார்த்தான் என்னே! இறந்தவர்களைக் கொன்றுவருமாறு காளமாமுனிஎன்னை ஏவினன்?' என்று கோபங்கொண்டான்; திரும்பிவந்து தான்முற் கூறியாங்குக் காளமாமுனியைக் கொன்று சென்றான்.

சிறிது நேரமானதும் தருமர் உணர்வுபெற்று எழுந்தார். இது நச்சுப்பொய்கைபோலும்; அதனை ஆராயாது நீர்வேட்கை மிகுதியால் தண்ணீர் பருகி இவர்கள் இறந்து போயிருத்தல் வேண்டும்'

என்று எண்ணினர். 'இனித்தாம் மாத்திரம் உயிருடன் இருப்ப தில் பயன்யாது?' என்று எண்ணித்தாமும் இறக்கும் பொருட்டு நீர் பருகச்சென்றனர். செல்லலும் ஓர் அசரீரி "தருமரே, நீவிர் இந்தத்தண்ணீரை இப்பொழுது பருகலாகாது. நாம் கேட்கும் வினாக்களுக்கு விடை உதவியபின்னரே பருகல் வேண்டும்" என் றது. தருமரும் நீர்பருகாது நின்றனர். அசரீரியும் பல வினாக் களைக் கேட்டது. தருமர் அவை அனைத்திற்கும் தக்கவாறு விடை பகர்ந்தனர்.

உடனே தருமதேவதை அசரீரியாகி தாம் தருமதேவதை என்பதையும், துரியோதனனால் செய்யப்பட்ட இடையூறை நீக்க தாம் செய்த சூழ்ச்சியே இச்செயல் என்பதையும் கூறியது; இற ந்த அனைவரையும் உயிர் பிழைக்கச்செய்தது. இவ்வரலாற்றால், ஆராயாது செய்வதால் தீங்குவரும் என்பதும் ஆராய்ந்து செய்வ தால் நன்மையே விளையும் என்பதும் விளங்கும்.

தண்டமிழ்த்தொண்டர்.

---

# இந்தியாவின் சிறப்பு.

(506-பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இவர்கள் சொல்வதை ஒருவாறு ஏற்றுக்கொண்டு விடலாம். எவ்விதமெனில் இவ்விதம் அழகான தேசம் இப்போ துமிருக்கிறது. அதன் பெயரும் ஸ்வரூபமும் அவர்களுக்குத் தெரியாததால் ஸாமான்யமாய் தேசாந்தரத்திலிருந்து வந்துவிட் டார்களென்று மட்டிலும் கூறிவிட்டனர். அத்தகைய நமது தேசம் ஹிமயமலையின் சிகரத்தில் இருக்கிறது. அதை நாம் ஸ்வர் க்கமென்போம். அத்தேசத்திற்கும் நமக்கும் போக்குவரத்து ஸம் பந்தம் உண்டு. ஆதல்பற்றியே அர்ஜுனன் போனனென்றும் அவன் வரத்தாமதமாகிறதே எதிர்கொண்டு சென்று பார்ப்போ மென்று தர்ம புத்திராதிகள் இமயமலையேறிச் சென்றார்களென் று

பாரதத்திற் கூறப்பட்டிருக்கிறது. இதைத்தவிற நமக்கு வேறு தேசமில்லை. இத்தேசத்திலிருந்துதான் நாம்வந்தோம். இவர்கள் சொல்லும் வார்த்தையில் இன்னொரு புத்திசாலித்தனத்தைப்பாருங்கள் ஆர்யர்கள் தேசாந்தரத்திலிருந்து வரும்போது ஸிந்து நதியையும் கையில்கொண்டுவந்து அங்கு ஓடவிட்டார்களா. முன்னமேயே அது ஓடிக்கொண்டுதானே இருந்துகொண்டிருக்கவேண்டும். அப்படி இருக்க சுகமாய் நதி ஓரத்தில் ஜலவசதியை உத்தேசித்து இவர்களுக்குமுன் ஒருவரும் குடிஇருந்திருக்கமாட்டார்களா. அப்படி இல்லையென்றால் இது சுகமென்று தெரிந்துகொள்ளாத ஒரு ஜாதியை மனிதஜாதியென்று சொல்லவேண்டுமா. மற்றுமொன்று நாம் குடியேறினதற்கு அப்புறமா ஸிந்துநதியை ஹிந்துவென்று வழங்க ஆரம்பித்தனர். அதற்குமுன் அந்த நதியைப் பாரஸீகர்பார்த்ததேஇல்லையோ? இல்லையென்றால் ஸிந்து என்று அழகிய ஸம்ஸ்கிருதப் பெயரை யார் அவர்களுக்கு உபதேசித்தார். ஸிந்துவை ஹிந்துவென்று உளருபடியாய்ச் சொல்லிக் கொண்டு வந்த இவர்கள் நம்மவர்கள் குடியேறுவதைப் பார்த்தவுடன் நீங்கள் யார் எந்ததேசத்திலிருந்து இங்கு வருகிறீர்களென்று கேட்டிருக்கமாட்டார்களா. அப்போது நம் முன்னோர்கள் ஆர்யர்களென்று கூறியிருக்கமாட்டார்களா. அப்படியாயின் ஆர்யர் என்ற பதத்தை உளருபடியின்றி உச்சரிக்க முடியும். அப்போது நமக்கு ஆர்யர்களென்றே பெயர் ஏற்பட்டிருக்குமேதவிற உளருபடியான ஹிந்துவென்ற பெயரே வந்திருக்கமாட்டாது. ஆகவே யுக்தி நியாயத்திற்கு ஒவ்வாத இந்த ஆபாஸவசனங்கள் நமக்கு வேண்டாம். நாம் அனுசித்த வம்சபரம்பரையாய் இங்கு பாதகண்டத்தை அனுபவித்துக்கொண்டுவரும் ஆர்யர்களென்றே வைத்துக்கொண்டு மேற்செல்வோம்.

இனி ஹிந்துஸ்தானம் என்று ஓர் தேசத்தைச்சொல்கிறோம் இவர்களின் சொற்படி ஆர்யர்களின் வாஸஸ்தலமான ஸிந்துநதிக் கரையையா ஹிந்துஸ்தானமென்று சொல்வது, அவ்விதம் கூறவில்லை. கங்கைக்கும் ஸிந்துவுக்கும் நடுப்பிரதேசமான மருபூமி (Desert) மத்யபாரதம் என்ற (Central India) இன்னும் அங்குள்ள உன்னத பூமியே ஹிந்துஸ்தான தேசமெனப்படுகிறது. ஆகவே இதைவிடுவோம்.

இனி இப்புண்யபூமியை தக்ஷிணதேசமென்றும் உத்தரதேசமென்றும் வழங்குகின்றனர். இப்பெயர் எதனாலேற்பட்டதென் பதைக் கவனிப்போம். நமது தேசத்தில் நடுவில் விந்தியபர்வதமொன்றிருக்கிறது. இப்பர்வதத்தின் வடபாகத்தில்தான் ஆதிகாலத்தில் நம்முன்னோர்கள் வஸித்துக்கொண்டிருந்தனர், விந்தியத்திற்குத் தெற்கில் காடும் அதில் ராக்ஷஸர்களும் காட்டுமனிதர்களும்தான் வாசம்செய்தனர். அவர்கள் நம் தேசத்திற்கு வந்து அடிக்கடி நம்மைஉபத்திரவம் செய்யாமலிருத்தலின் பொருட்டே கோட்டைச் சுவர்போல் நம்பிதாவான பரமேசன் பரமகருணையுடன் மலையைக் கிளப்பிவிட்டார். அப்படியும் ராக்ஷஸர்களால் நமக்குக்கெடுதல் நேர்ந்தால் குழந்தைகளான நம்முடைய கஷ்டத்தைச் சற்றேனும் சகியாத நம்பகவான்தானே திருவவதாரம் கொண்டு அரக்கர்களைச் சங்கரித்து நமக்கு சுகத்தைக்கொடுப்பதே வழக்கம். ஆதல்பற்றியே நம்தேசத்திற்கோ மதத்திற்கோ கெடுதல் வரின் அவனை நினைத்துக்கொண்டிருந்தால் நமது கஷ்டங்கள் விலகிவிடுமென்றே நாம் இப்போதும் எண்ணுகிறோம். இதிருக்கட்டும். ஆகவே இவ்விதம் விந்தியபர்வதத்திற்குத்தெற்கே உள்ள காட்டுப்பிரதேசமும் ஒருகாலம் அகத்திமா முனிவரால் சீர்திருத்தப்பட்டு ஆர்யர்களைக் குடியேறும்படி செய்தனர். அதனால் விந்தியபர்வதத்தை ஒட்டித்தான் தக்ஷிணதேசமென்றும் உத்தரதேசமென்றும் வழங்கலாயிற்று. இதை தக்ஷிணபதம் என்றும் சொல்வதுண்டு. (Deccan) என்று ஆங்கிலத்தில் இதையே கூறுகின்றனர்.

விந்தியபர்வதத்தை அடுத்து மிகப்பள்ளத்தாக்காய் நர்மதைக்கரைகள் இருக்கின்றன. இதை (Valleys of the Nerbudda) என்பார்கள். அங்குருக்ஷபர்வதமொன்றுண்டு. அதை (Satpura-Mountains) என்கின்றனர். அங்கிருந்து பள்ளத்தாக்காய் தபதீ நதிப்பிரதேசம் உண்டு. தபதீஎன்பதை (Tapti River) என்கிறார்கள். அங்கிருந்து கீழ்மேலாய் மலைவரிசையோடு கூடியதாய் முக்கோணவடிவமாய் குமாரீபரியந்தம் உயர்ந்து திரிகோண சக்கிரம்போலிருக்கிறதாய்க் கூறுகின்றனர். இதைத்தான் தக்ஷிணதேசமென்பார்கள். உத்தரதேசத்தில் கூர்ஜரதேசமென்றும் வங்கதேசமென்றும் பலபிரிவு உள.

# ஆர்யதர்மம்.

இப்பாரதகண்டம் மற்ற எந்ததேசத்திற்கும் மேலானது என்பது சொல்லாமலே விளங்கும். பூமிக்கு இயற்கையாய் என்ன இலக்கணம் உண்டோ அது இக்கண்டத்தில்தான் காணப்படும். எவ்விதமெனில் இங்குஅநேக உயர்ந்த மலைகள்உண்டு. ஒவ்வொரு அம்மலையிலும் மகிமை பொருந்திய மகா மூலிகைகளும் விலையுயர்ந்த அநேக திவ்ய விருக்ஷங்களும் உண்டு. பயங்கரமான காடுகளும் ஸமஸ்ததானியங்களும் விளையக்கூடிய திவ்யபூமி விசேஷங்களும் மணல்பிரதேசங்களும் மருபூமியும் உன்னதபூமியும் இடத்திற்குத் தகுந்தபடி ஈசன் சிருஷ்டித்திருக்கிறான்.

பாருங்கள்! இடைவிடாது மழைபெய்யும் அநேக உன்னத பூமி நம் தேசத்தில் உண்டு. அம்மழை நின்ற க்ஷணமே அப்பூமியைப்பார்த்தால் இங்குமழைபெய்ததோவென்று நினைக்கும்படி அவ்வளவு சீக்கிரம் வற்றிவிடுகிறது. அம்மழையினால் அத்தேசத்திற்கு நன்மைதான். அவ்விதம் மழை நம் தேசத்திற்கு ஒரு நாள்கூடத் தாங்கமுடியாதென்று கொண்டு மழை ஓரிடத்திலும் அத்தண்ணீரால் மட்டிலும் நமக்குப் பரமோபயோகத்தையும் அனுபவிக்கக்கொடுத்திருப்பது ஈசனின் கருணையன்றோ; அத்தண்ணீரைக் கொண்டுவரும் புண்ய நதிகள் நம்தேசத்தில் பல மிகப் பெரிய தடாகங்கள் அழகாய் பிரகாசிக்கின்றன.

இனி இங்குள்ள மலைகளைக் கவனிப்பாம். மற்ற தேசம் போல் ஓர் உபயோகத்திற்கும் ஆகாததோடு நெருப்பையும் கக்கிக்கொண்டு தேதசங்களைப்பாழாக்கும் மலைகளா நமது தேசத்திலிருக்கின்றன. இல்லை இல்லை. நம்தேசத்து உத்தமமான மலைகளில் உயர்ந்தரத்தினங்கள் கிடைக்கும். அதிகமாய் எதற்குபோன உயிரைத் திரும்பக்கொண்டுவர மூலிகைகளை உத்பத்திசெய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இதில் பர்வதராஜனென்று வேதங்களிலும் முழங்கப்பெறும் ஹிமவானைப்பாருங்கள்.

(தொடரும்)

M. N. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

விசேஷமாகச்செய்து வணங்கிப்போற்றி விடைபெற்று அந்தச் சோழனையழைத்துக்கொண்டு அவனுடையராஜ்யத்துக்குப்போய் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து, அதன் பின் அவன் மகளைத்தன் மகனுக்கு விவாகம் செய்து முடித்துத் தன் நகரம் போய்ச் சேர்ந்தனன். விக்கிரம சோழமகாராஜன் குலசேகர பாண்டியன் சென்ற பின்னர் தனது ராஜ்பத்தைத் தன் மகனிடத்து ஒப்புவித்து முன்போல் காஞ்சி நகரத்துக்கு வந்தனன். அப்பொழுது அந்தக் காஞ்சி நகரம் காடாகவிருத்தலைக் கண்டு அக்காட்டையழித்து முன்போல் எங்கும் புஷ்பவனங்களுண்டாக்கித் தேவி ஆலய ஜீர்ணோத்தாரணம்செய்து பசுக்கள், பூமிகள், வேண்டிய தனங்கள், ஆபரணவகைகள், பொன்னுடைகள் முதலிய எல்லாச் செல்வங்களையும் தேவிக்கு அர்ப்பணம் செய்து வைராக்கிய சீலனாய் அரிய தவங்களைச் செய்து வந்து யாவராலும் * காந்தாரச்சோழனென்று அழைக்கப்பட்டவனாய்த்தேகாந்தத்தில் தேவியினுடைய பதத்தையடைந்தனன்.

§ குண ருத்திரரும், ஆதிசேஷனும் கலியுகத்தில் தேவியை விதிமுறையாகப் பூஜித்து முடிவில் முடிவில்லாத முத்திபதத்தையடைந்தனர்.

இவ்வண்ணம் யுகங்கள்தோறும் தேவர்களேயன்றிச் சோம சூரியாக்கினிகளென்கிற மூன்று வம்சத்தரசர்களும் ஸ்ரீ காமாக்ஷி தேவியை வழிபட்டுப் போகமோக்ஷங்களையடைந்துள்ளார்.

இங்ஙனம் எக்காலத்தும் காஞ்சியில் காமகோடி பீடவாசினியாய் வீற்றிருக்கின்ற சுவர்ணகாமாக்ஷியை ஒரு தரம் தரிசிக்கப் பெற்றவர்கள் யாரோ அவர்கள் கோடி கோதான பலனையடைவார்கள்.

## நூற்பயன்.

இந்தக் காமாக்ஷி லீலாப்பிரபாவத்தைப் படிப்போரும் கேட்போரும் சுவர்ணகாமாக்ஷியைத் தரிசனம் செய்யும் பலனை யடை

---

* காடுவெட்டிய சோழன்.

§ பிரம விஷ்ணுக்களாகிய இருவரோடு ஒருவராயுள்ள உருத்திர மூர்த்தி.

வார்கள். அன்றியும் இதனைப் பங்குனி மாதம் திருக்கலியாண மகோற்சவ தினமாகிய உத்திர நக்ஷத்திர தினத்திலும் காமாக்ஷி தேவியினுடைய ஆவிர்ப்பாவ தினமாகிய ஐப்பசி மாதம்பூரநக்ஷத்திரத்திலும், காமாக்ஷி ஸ்வரூபமாய் விளங்கும் வரதராஜ மூர்த்தியினுடைய அவதார தினமாகிய சித்திரை மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்திலும் ஆசார்ய முகமாய்க் கேட்டு வந்து முடிவு செய்வார்களாயின் அவர்களுடையும் பலனைச் சொல்லி முடியாது. அன்றயதினம் காமாக்ஷி பிரபாவத்தைச்சொல்லி வந்தவராகிய அவரை சாக்ஷாத் வியாசராக நினைத்து அவருக்கு வஸ்திராபரண சந்தன புஷ்பாக்ஷதை பூமாலை முதலியவை சாத்தி தூபதீபம் காட்டி திவ்யமான ஆகாராதிகளால் திருப்திசெய்வித்துப் பின்னர் தாம்பூலம் மங்களார்த்தி முதலியன நடத்தி வேதபாராயணாதி கோஷங்களுடன் சகலவாத்தியங்களும் கோஷிக்க அவருடைய கிருகத்தையடைவித்து அவரைச் சிறந்த ஆசனத்திலிருத்தி நமஸ்காரம் செய்து அவரிடத்தில் ஆசீர்வாத அக்ஷதை பெற்று சிரசில் தரித்துத் தங்களிடம் போய்ச்சேரக்கடவர் என்று சூரதமகாராஜாவுக்கு மார்க்கண்டேய முனிவர் சொல்ல அவன் அவரைப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து ஸ்துதித்து நிற்ப, மார்க்கண்டேய முனிவர் அரசனை ஆலிங்கனம் செய்துகொண்டு ஸ்ரீ காமாக்ஷிதேவியானவர் தமது இளந்தளிர்போன்ற மாணிக்கக்கங்கணமணிந்த சுவர்ணத் திருக்கரமாகிய அகப்பையால் சகலஸௌபாக்கியங்களையும் முகந்துமுகந்துகொடுத்தருளவேண்டும், நீ சத்ருஹீனனும் அகண்ட சாம்பிராஜ்யமுடையவனும் தீர்க்கமான ஆயுளைப்படைத்தவனும் புத்திர பௌத்திர, விருத்தியுடையவனும் சர்வகாம சமர்த்தியுடையவனும் இம்மையில் வாழ்ந்து அம்மையில் அனந்தகுண கணமணியாய் தேஜோமணியாய் விளங்கும் ஸ்ரீ தேவியினுடைய சரணாரவிந்த நிழலில் வாழக்கடவாய் என்று ஆசி புகன்றனர்.

ஸ்ரீ காஞ்சி மகிமை முற்றிற்று.

S81

உ

திருச்சிற்றம்பலம்.

காஞ்சிக்ஷேத்திர மஞ்சரி.

# ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள மூர்த்திகள்.

## முதலாம் ஆவரணம்.

——(o)——

ஏகாம்பர நாதர்.

காமாக்ஷி தேவியாரால் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம், சிவ கங்கை, கம்பாநதி, உமாபத்திரை, கீர்த்திமதி விருக்ஷம், மா.

உலகமாதாவாகிய உமாதேவியார் தமக்குப்போக பூமியாகிய மந்தரமலையில் போகார்த்தமாய் வீற்றிருக்கின்ற சிவபெருமானோடு போகலீலாவிநோத இன்பரசங்களை நுகர்ந்தபின்னர் பெருமானும் களித்திருக்கும் களிப்பை நோக்கி மீதூர்ந்த களிப்புடையராய்,

மும்மைப்புவனங்களுஞ் செய்தவப் பேறு முற்றச்
சும்மைத் திரைநீருடை மேதினி தேற்ற மெய்தச்
செம்மைத்திசை யெட்டினுந் தென்றிசைமிக்கு வெல்ல
மம்மர்த்தொகை நூறிய வண்டமிழ் நாடு வாழ.

நலமன்னிய தண்டக நாடு செழித்து மல்கப்
பலரும் புகழ் காஞ்சி வளம்பதி மேன்மை சாலக்
குலவுஞ் சமயங்களோராறு மகிழ்ச்சிகூற
வுலகெங்கணும் வைதிக சைவ முயர்ந்து மன்ன.

எவ்வெத்தவத்துஞ் சிவபூசனையேற்ற மன்னப்
பௌவப் புனல் சூழ்படி மேலவர் தேறியுய்யத்
தெவ்வுத்தொழில் பூணு மறக்கடைதேயநல்கூ
ரெவ்வத்திற நீங்கியுயிர்ப் பயிரெங்குமோங்க.

முப்பான் முதலிட்ட விரண்டற முந்தழைப்ப
வெப்பாலுலகத்தொளி யாவையுமெம்பிரானார்
தப்பா விதியினெளிச் சால்பென யாருங்காண
வப்பார் சடையாடித் தொண்டரகங் களிப்ப.

ஓர் விளையாட்டை எண்ணிப் பின்புறத்தே சென்று தமது இருகொங்கைகளும் அழுந்தத்தழுவி இரண்டு கண்களையும் இரு கரங்களாலும் மூடி மறைத்தனர். மறைப்பவே உலகமெல்லாம் இருள் மூடியது. அது மூடவே ஆன்மாக்கள் அனைவரும் உயி ருக்குறுதி பயப்பனவாகிய தவம், தானம், ஞானம், அர்ச்சனை முதலிய யாவும் இழந்தவர்களாய்ப் பதிதாராயினர். ஆகவே பாவம் மேலிட்டு அம்மையாகிய உமாதேவியைப் பற்றியது. பற்றவும் அழகெல்லாம் திரண்ட திருமேனி கருத்து விளையாட்டொழிந்து வினையாய் முடிந்தது. முடியவே உமாதேவியார் திருவுளம் நடுங்கி இருகாங்களையும் எடுத்துப்பெருமானைப்பணிந்து "யானுய் யும் வகையருள் செய்வாய்" என்று வேண்டினர். வேண்டவும் இறைவனார் தேவியை நோக்கி எமக்கும், நின்றனக்கும், நந்தன் அகத்தடியவர்க்கும் சூரியனை இருளணுகாதது போல் பாவம் அணுகுவதில்லையாயினும் நாமிருக்கும் உலகிற்கு அமையப் பாரா யிருத்தலினால் அவ்வுலகினாகிய மக்கட்குரிய விதிவிலக்குகள் இத்தன்மைத்தென்பது பாவபுண்ணியம் இத்தன்மைத்தென்ப தும் பரிகாரங்களாயுள்ளவை இவை என்பதும் நாம் காட்டினு லன்றி அவரறியவல்லரல்லாகலான் இப்பொழுது என்னால் விதிக் கப்படும் விதியைக்கொண்டு அவ்வழியே நடந்து இப்பழியைப் போக்கடித்துக் கொள்வாயென்று சிவார்ச்சனையையும், சிவத்தியா னத்தையும், சிவஸ்தோத்திரத்தையும் சிவபஞ்சாக்ஷர ஜபத்தை யும் சிவனடியார் வழிபாட்டையும் அனுக்கிரகம் செய்து இவை யிற்றை நமக்கினிய காஞ்சி நகரின்கண் வந்து காமகோட்டத்தில் தவமும் முப்பத்திரண்டறமும் வழுவாது செய்துவந்து மாவடி யின்கண் சிவார்ச்சனைமுதலிய ஐந்தையும் விடாதுசெய்து அன்று மந்தரமலையில் பின் புறந்தழுவி மனங்களித்தது போல் என்றும் பக்கத்திருந்து திருவேகம்பரைத் தழுவி இன்புற அப்பெருமானை எத்தி வழிபடப்பெற்றனர்.